**சார்பு நீதிமன்றம், உசிலம்பட்டி**

**OS. No. 314/2019**

**01.07.2025**

**P.W.1- சத்யா**

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 2ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:**

எனக்கு 2010ல் திருமணம் நடைபெற்றது. எனது கணவர் திருமணத்தின்போது சென்னையில் இருந்தார். தற்போது வரை சென்னையில் எனது கணவர் உள்ளார் என்றால் சரியல்ல. 1 வருடம் 1 மாத காலமாக உசிலம்பட்டியில் உள்ளோம். அதற்கு முன்புவரை நான் எனது கணவருடன் சென்னையில் இருந்தேன் என்றால் சென்னையிலும் இருப்பேன், உசிலம்பட்டியிலும் இருப்பேன். தாவா புரோநோட்டை 20.10.2017ல் எனது அம்மா வீட்டில் வைத்து நானும், எனது அம்மா, எனது தங்கை ஆகியோர்கள் இருந்தோம். தாவா புரோநோட்டில் சாட்சியாக தாமரைகண்ணி, லதாபாண்டியம்மாள், அய்யணார் ஆகியோர்கள் கையெழுத்து செய்தனர். அய்யணார் வாதியின் அண்ணன் என்றால் சரிதான். புரோநோட்டை எழுதியது யார் என்றால் லதாபாண்டியம்மாள் எழுதினார். புரோநோட்டில் புளூ மை பேனாவில் எழுதப்பட்டது. கையெழுத்து கருப்பு மையினால் எழுதப்பட்டது. வழக்கிற்காக வேறு வேறு நாளில் புரோநோட்டை பூர்த்தி செய்ததால் தான் இரு வேறு மையினால் எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. கையெழுத்து கருப்பு மையினால் வாங்க வேண்டும். எனது அம்மா, தங்கை, தம்பி ஆகியோர்கள் கொடுக்கல், வாங்கல் தொழில் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. பழக்கத்திற்காக பணம் கொடுப்பட்டது. 1, 2 பிரதிவாதிகள், அய்யணார் ஆகியோர்கள் உசிலம்பட்டி மார்க்கெட்டில் பூ கட்டும் தொழில் செய்து வருகிறார்கள். எனது குடும்பத்தாருக்கும், பிரதிவாதிகளுக்கும் கொடுக்கல், வாங்கல் இருந்தது என்றால் சரியல்ல, நான் தான் பணம் கொடுத்தேன். வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்னர் எனக்கும், பிரதிவாதிகளுக்கும் கொடுக்கல் வாங்கல் இருந்தது என்றால் சரியல்ல. நானும், பிரதிவாதிகளும் வேறு வேறு சமூகத்தை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். 1, 2 பிரதிவாதிகள், அய்யணார்

ஆகியோர்கள் எனது அம்மாவிடம் தனித்தனியாக கொடுக்கல், வாங்கல் வைத்திருந்தார்கள் என்றால் சரியல்ல. அவ்வாறு கொடுக்கல், வாங்கல் ஏற்பட்டபோது பிரதிவாதிகள் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் எங்களது மீது புகார் கொடுத்தார்கள் என்றால் புகார் கொடுத்தார்கள், அது பொய் புகார் ஆகும். மேற்படி புகார் விசாரணையில் சமரசமாக போவதாக எழுதிக்கொடுத்ததால் அந்த புகார் முடிக்கப்பட்டது என்றால் பணம் கொடுப்பதாக கூறினார்கள், பணம் கொடுக்காததால் வழக்கு தாக்கல் செய்தேன். சாட்சி அய்யணார் மனைவி அவர் வாங்கிய பணத்தை எனது தாயரிடம் திரும்ப கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல. அவரிடம் பணத்தை வாங்கியதால் தான் அவரை வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. மீண்டும் பிரச்சினை ஏற்பட்டு பிரதிவாதிகள் உசிலம்பட்டி நகர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார்கள் என்றால் சரிதான். மேற்படி புகார் விசாரணையில் பிரதிவாதிகள் ரூ.70,000த்தை எனது தாயாரிடம் கொடுத்து முடித்தார்கள் என்றால் சரியல்ல. வழக்கு விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றாலும், வழக்கு நடைபெற்ற காலத்தில் நான் சென்னையில் இருந்தேன் என்றால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்தபோது பிரதிவாதிகள் மேக்கிழார்பட்டி காலனியில் குடியிருந்தார்கள். வழக்கில் சொல்லப்பட்ட சொத்தானது மேக்கிழார்பட்டி நடுநிலை பள்ளியின் அருகில் உள்ளது. பிரதிவாதிகள் காலையில் பூக்கடை சென்று இரவு நேரம் தான் வீட்டிற்கு வருவார்கள் என்றால் சில நாட்கள் வீட்டில் இருப்பார்கள். 2ம் பிரதிவாதி குடியிருக்கும் சரியான முகவரிக்கு நான் அழைப்பாணை அனுப்பவில்லை என்றால் சரியல்ல. வழக்கில் சரியான முகவரி அளிக்காததால் பிரதிவாதிகளுக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு எந்த தேதியில் பிறப்பிக்கப்பட்டது என்றால் தேதி ஞாபகமில்லை. 09.09.2020ம் தேதி ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றால் இருக்கலாம். அதன்பின்னர் 18.08.2023 வரையில் நான் ஊரில் இல்லாததால் நான் நீதிமன்றத்தில் ஆஜராகாமல் சாட்சியம் அளிக்கவில்லை என்றால் மருத்துவ சிகிச்சையில் இருந்ததால் ஆஜராக முடியவில்லை. எனது குழந்தைக்கு தற்போது இரண்டரை வயது ஆகிறது. 24.08.2021ல் எனது வருகையின்மை காரணமாக வழக்கு தள்ளுபடியானது என்றால் சரிதான். அதன்பின்னர் வழக்கை எப்போது கோப்பிற்கு எடுத்தேன் என்றால் எனக்கு ஞாபகமில்லை. அவ்வாறு கோப்பிற்கு

எடுத்தபின்னரும் 6 வாய்தாக்கள் சாட்சியம் அளிக்க முன்வரவில்லை என்றால் நான் சிகிச்சையில் இருந்தேன். அதனால் வர இயலவில்லை. சாட்சி அய்யணார் சாட்சி கையெழுத்து செய்ததில் அடித்தல் திருத்தல் உள்ளது என்றால் சரிதான். அய்யணார் கையெழுத்து இல்லையென்றால் சரியல்ல. எனது வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

ம.வி.இல்லை.

P S RUSKIN RAJ

Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2025.07.01 17:10:42 +0530

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.